விழியின் சாட்சி
பார்வை பேசும் உண்மை
தினசரி நாளிதழ்
தமிழ்நாடு முழுவதும்
மாவட்டம் மற்றும்
தாலுக்கா வாரியாக
நிருபர்கள் மற்றும்
போட்டோகிராபர்கள்
தேவை
தொடர்புக்கு ஆசிரியர் க ஜெயகர்
9944784657

TNBIL/26/A1983
பார்வை பேசும் உண்மை
# விழியின் சாட்சி
தினசரி காலை நாளிதழ்- தமிழ் மற்றும் ENGLISH

**GOLD RATE**
PER GRAM
1ST JULY 2026

| CITY | 22K GOLD | 24K GOLD | CHENNAI |
|---|---|---|---|
| MUMBAI | ₹14,650 | ₹15,980 | ₹14,645 |
| DELHI | ₹14,670 | ₹16,000 | ₹14,660 |
| AHMEDABAD | ₹14,655 | ₹15,985 | ₹14,650 |
| BANGALORE | ₹14,640 | ₹15,970 | ₹14,645 |
| HYDERABAD | ₹14,645 | ₹15,975 | ₹14,645 |
| CHENNAI | ₹14,645 | ₹15,975 | ₹14,645 |

VELLORE | Volume- 1 | Issue:6 | 01-07-2026 | புதன்கிழமை | வேலூர் | விழி-01 | சாட்சி -:6 | Editor name:G Jayakar | Mobile: 9944784657 | Rs.4/-

# கலெக்டர்கள், போலீஸ் அதிகாரிகள் சுதந்திரமாக செயல்படலாம்: முதல்வர் விஜய்



சென்னை , ஜூன் 30:

கலெக்டர்கள் மற்றும் எஸ்பிக்கள் அரசு விதிகளுக்கு உட்பட்டு சுதந்திரமாக செயல்படலாம். தனிநபர்களின் தலையீடு இருக்காது என முதல்வர் விஜய் கூறியுள்ளார். சென்னையில் நடந்த கலெக்டர்கள் மற்றும் போலீஸ் அதிகாரிகள் மாநாட்டில் முதல்வர் விஜய் பேசியதாவது: ரேஷன், கல்வி, குடிநீர், சுகாதாரம், மின்சாரம், சாலை வசதி, பஸ் வசதி போன்ற அடிப்படை வசதிகளுக்கு முக்கிய கவனம் செலுத்த வேண்டும். சட்டம் ஒழுங்கு பிரச்னையை பொறுத்தவரை அதிகாரிகள் சட்டத்தின் அடிப்படையில் சுதந்திரமாக முடிவு எடுக்கலாம். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், எவ்வளவு உயர்வானவர்களாக இருந்தாலும் பாரபட்சமின்றி சட்டப்படி உடனடியாக துரிதமாக நடவடிக்கை எடுத்து நடவடிக்கை எடுத்து உரிய தண்டனை பெற்றுத்தர வேண்டும். விவசாயிகள், மீனவர்கள், மாற்றுத்திறனாளிகள் கூட்டத்தை கனிவோடு நடத்த வேண்டும். மனு கொடுக்கும் மக்களின் பிரச்னைகளை புரிந்து கொண்டு அதற்குரிய நடவடிக்கை எடுத்து தீர்வு தர வேண்டும். திங்கட்கிழமை தவிர மற்ற நாட்களில் காலைலயில் கள ஆய்வுக்கு செல்ல வேண்டும். வேலை செய்வது, மனு வாங்குவதுமட்டும் அனைத்து மாவட்ட கலெக்டர்களின் வேலையல்ல. தொடர் கண்காணிப்பு மிகவும் முக்கியம். அதற்காக ஒரு அதிகாரியை நியமித்து தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்களிடம் குறையைக் கேட்பதை விட அதைத்தீர்ப்பது மிகவும் முக்கியம். ஒவ்வொரு மாதமும் சட்டம் ஒழுங்கு கூட்டத்தை நடத்த வேண்டும். முக்கியமான வழக்குகளில் குற்றவாளிகள் தப்பித்து விடாதபடி நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும். கலெக்டர்கள், வருவாய்த்துறையினர் மற்றும் போலீசார் கலந்தாலோசித்து எந்தவொரு சம்பவமும் நடப்பதற்கு முன்னர், காரணத்தை அறிந்து கொண்டு குற்ற சம்பவங்கள் நடப்பதை தடுக்கவேண்டும். சட்டம் ஒழுங்கு பாதிப்பை ஏற்படுத்துபவர்களின் நடத்தையில் மாற்றத்தை கொண்டு வர வேண்டும். பெண்கள் பாதுகாப்பை 100 சதவீதம் உறுதிப்படுத்த வேண்டும். அதில் சமரசம் கூடாது. சிறப்பு ஏற்பாடுகளை செய்தே ஆக வேண்டும். மாணவர்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பில் முக்கிய கவனம் செலுத்துவதுடன், ஒவ்வொரு பள்ளிக்கும் அருகில் உள்ள கடைகளை தொடர்ச்சியாக கண்காணிக்க வேண்டும். தேவைப்படும் நேரங்களில் அங்கு சோதனை நடத்த வேண்டும். போதைப்பொருள் தொடர்பான குற்றங்களில் ஈடுபடுவோரை உடனடியாக கைது செய்து நீதிமன்றத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுத்தருவதை உறுதிப்படுத்த வேண்டும். ரேஷன் கடைகளில் எடை குறைவில்லாமல் தரமான உணவு பொருட்கள் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும். இயற்கை பேரிடர் ஏற்படும் காலங்களில் உடனடி நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகளைத் துரிதமாக எடுத்து செயல்பட வேண்டும். அரசின் சேவைகள் மக்களின் வீடுகளுக்கே போய் சேர்வதற்கான உங்களின் ஆலோசனைகளை எதிர்பார்க்கிறேன். அரசு அலுவலகங்களில் ஆய்வு செய்ய மாவட்ட அமைச்சர்கள் மற்றும் எம்எல்ஏக்கள் வரும் போது, அவர்களுக்கு ஒத்துழைப்பு அளிப்பதுடன், அரசு திட்டங்கள் எப்படி செயல்படுகிறது என்பதை அதிகாரிகள் நேரடியாக ஆய்வு செய்ய வேண்டும. கோவில் திருவிழாக்கள், அரசியல் பேரணிகள் மற்றும் பொது நிகழ்வுகளின் போது நெரிசல் சம்பவங்கள் தடுக்கப்பட வேண்டும். பொதுப்பணித்தறை, அறநிலையத்துறை தீயணைப்பு , மீட்பு மற்றும் வருவாய்த்துறைகள் அனைத்து முக்கிய நிகழ்வுகளின் போது போலீசாருடன் ஒருங்கிணைந்து முன்கூட்டியே செயல்பட வேண்டும். பெண்களுக்குப் பாதுகாப்பற்ற பகுதிகள், குற்றம் அதிகமான இடங்கள், விபத்துகள் அதிகமாக நடக்கும் பாதைகள் மற்றும் மூத்த குடிமக்கள் அதிகமாக வரும் இடங்கள் என கண்டறிந்து அனைத்து முக்கிய இடங்களிலும் சிசிடிவி நிறுவ வேண்டும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போக்சோ வழக்குகளில் வழக்குப்பதிவு செய்வதில் தாமதம் ஏற்படுவது சகிக்கவே முடியாது. பள்ளிகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் புகார்களை மறைக்கவோ, தாமதமாகவோ அனுப்பவோ கூடாது. சிறார் குற்றங்களில், கும்பல் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் போதைப்பொருள் துஷ்பிரயோகம், குற்றங்களில் ஈடுபடும் போக்கு அதிகரிப்பதை கட்டுப்படுத்த வேண்டும். சுகாதாரத்துறை அனைத்து மாவட்டங்களிலும் போதை முறிவு முகாம்களை நடத்த வேண்டும். திருவள்ளூர், கன்னியாகுமரி, தென்காசி, தேனி, கோவை , கிருஷ்ணகிரி, தர்மபுரி போன்ற எல்லையோர மாவட்டங்கள் வழியாக போதைப்பொருட்கள் கடத்தப்படுவதையும், உரிய அனுமதியின்றி கனிமவளங்கள் கடத்தப்படுவதையும் மாவட்ட கலெக்டர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் தீவிரமாக கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். சென்னை, கோவை மற்றும் திருப்பூர் போன்ற தொழில்முறை மண்டலங்களில் புலம்பெயர் தொழிலாளர்கள் இடையே கஞ்சா, குட்கா மற்றும் பிற போதைப்பொருள்கள் பரவல் தீவிரமாக கண்காணிக்கப்பட வேண்டும். காவிரி, வைகை மற்றும் பிற ஆற்று மணல் படுகைகளில் சட்டவிரோத மணல் திருட்டை கண்டறிந்து சுரங்க, வருவாய் மற்றும் போலீஸ் அதிகாரிகள் ஒன்றிணைந்து சட்டவிரோத மணல் குவாரிகளை தடுத்து நிறுத்த வேண்டும். புலம்பெயர்ந்தோர் மீதான தாக்குதல் மற்றும் சுரண்டலுக்கு உட்படுத்தக்கூடாது. அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குவதற்காக தொழிலாளர் நலத்துறை மூலம் புலம்பெயர் தொழிலாளர்கள் கட்டாயப்பதிவு அமல்படுத்தப்பட வேண்டும். கலெக்டர்கள் மற்றும் எஸ்பிக்கள் உண்மையாகவும், நேர்மையாகவும் இருக்க வேண்டும். வெளிப்படையாக இருக்க வேண்டும். இவ்வாறு முதல்வர் விஜய் பேசினார்.

## இன்றைய நாள்

புதன்கிழமை
(01-07-2026)
பராபவ ஆண்டு, ஆனி-17
பிறை: வளர்பிறை
திதி
பிரதமை காலை 7.38 மணி வரை, பிறகு துவிதியை
நட்சத்திரம்:
பூராடம் காலை 6.51 மணி வரை, பிறகு உத்திராடம்
யோகம்
மாஹேந்த்ர யோகம் மாலை 4.04 மணி வரை, பின்னர் வைத்ருதி யோகம். யோகம்.
ராகுகாலம்
மதியம் 12.00 1.30 மணி
எமகண்டம்
காலை 7.30 9.00 மணி
சூலம் –வடக்கு
நல்ல நேரம் :
காலை 9.15 10.15 மணி
மாலை 4.45 5.45 மணி

மேஷம் ...................... வெற்றி
ரிஷபம் ..................... நன்மை
மிதுனம் ................ மகிழ்ச்சி
கடகம் .......... முன்னேற்றம்
சிம்மம் ............... ஆதாயம்
கன்னி .................. உயர்வு
துலாம் ................... லாபம்
விருச்சிகம் ........... சாதனை
தனுசு ................ உற்சாகம்
மகரம் ..................... வெற்றி
கும்பம் .............. பொறுப்பு
மீனம் ............. சந்தோஷம்

## புதிய ரேஷன் அட்டைகள் அச்சிடும் பணி தீவிரம்




சென்னை , ஜூன் 30:

தமிழகத்தில் ரேஷன் கார்டு வழங்கும் பணிகள் மீண்டும் தொடங்குகின்றன. ஜனவரி முதல் விண்ணப்பித்த 2.25 லட்சத்திற்கும் அதிகமானோரில், முதற்கட்டமாக 46,000 பேருக்கு புதிய ரேஷன் அட்டைகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கத் தயாராக உள்ளன. முதலமைச்சர் விஜய் விரைவில் இதைத் தொடங்கி வைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்னையில் தற்போது புதிய அட்டைகள் அச்சிடும் பணி தீவிரமாக நடந்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. முதலமைச்சர் திட்டத்தை தொடங்கி வைத்த பின், நேடியாக வீடுகளுக்கே அனுப்பி வைக்கப்படும்.

## தவெகவுக்கு அதிர்ச்சி கொடுத்த இடதுசாரிகள்



சென்னை , ஜூன் 30:

சென்னையில் நாளை நடைபெறவுள்ள தவெக கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்கப்போவதில்லை என சிபிஐ, சிபிஎம் கட்சிகள் அறிவித்துள்ளன. அதேநேரம், நாளை முதலமைச்சர் விஜய்யை இடதுசாரி தலைவர்கள் சந்தித்து பேச உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தவெக அரசுக்கு ஆதரவு அளித்தாலும் கூட்டணியில் இடம்பெறவில்லை என்பதால் நாளை நடைபெறும் கூட்டத்தை இரு கட்சிகளும் புறக்கணித்துள்ளன. இது தவெக தரப்புக்கு சற்று ஏமாற்றமாக அமைந்துள்ளது.

## Former Tamil Nadu Congress President Selvaperunthagai Likely to Join DMK Soon



*CHENNAI, 30 JUN*

*Former Tamil Nadu Congress Committee president Selvaperunthagai, who recently lost his party post, is reportedly in talks to join the DMK. Sources indicate that discussions have been taking place over the past few weeks, and fresh details have emerged regarding the delay in his possible induction into the party.*

*Selvaperunthagai served as the president of the Tamil Nadu Congress Committee from 2024 until July 8 this year. In the recently concluded Assembly election, he contested from the Sriperumbudur constituency in Kanchipuram district as the sitting MLA but suffered defeat.*

*During the election campaign itself, Selvaperunthagai had announced that he would step down from the post of Tamil Nadu Congress president after the elections. Subsequently, Virudhunagar MP Manickam Tagore was appointed as the new state Congress president.*

*Meanwhile, reports suggest that Selvaperunthagai is likely to quit the Congress and join the DMK in the near future. It is said that he has been holding discussions with the DMK leadership for several weeks regarding his entry into the party.*

*However, his proposed induction into the DMK is reportedly facing opposition from former minister Thamo Anbarasan. Both Selvaperunthagai and Thamo Anbarasan belong to Kanchipuram district. It is believed that Anbarasan fears losing his political importance in the district if Selvaperunthagai is given a significant role, such as the district secretary post, after joining the DMK.*

*Despite this resistance, the DMK leadership is said to be keen on bringing Selvaperunthagai into the party. Political observers note that the DMK has been dissatisfied with certain developments involving the Congress after the Assembly elections. As a result, the party is reportedly interested in attracting leaders from the Congress.*

*Selvaperunthagai's experience as a state party president and his standing as an Adi Dravidar leader are also said to be factors behind the DMK's interest in him.*

*Congress leaders, speaking on the developments, alleged that Selvaperunthagai had been functioning more like a DMK leader. They stated that after assuming the state Congress presidency in 2024, he maintained close ties with the DMK leadership. According to them, when discussions arose within the Congress regarding alliance changes and greater political recognition in Tamil Nadu, Selvaperunthagai strongly advocated continuing the alliance with the DMK.*

*He is also credited with playing a key role in ensuring that the Congress remained part of the DMK-led alliance during the Assembly elections. Party sources believe that there is a strong possibility of him joining the DMK in the near future.*


## Auto Drivers Arrested for Threatening Migrant Workers and Extorting Money

*CHENNAI, 30 JUN*

*Migrant workers taken to a different location and threatened for Rs. 7,500 Four auto drivers have been arrested for allegedly threatening five migrant workers who had arrived in Chennai seeking employment. The workers were reportedly taken to a location other than their intended destination, where the drivers demanded Rs. 7,500 from them.*

*According to police, the migrant workers had come to Chennai in search of jobs. Instead of taking them to the destination they had specified, the auto drivers allegedly transported them to another location and demanded money from them. When the workers failed to pay the demanded amount, the drivers allegedly left all five of them at a recruitment agency in Ambattur. The accused are also alleged to have collected Rs. 8,500 before leaving the workers there. Following a complaint, the police registered a case and arrested the four auto drivers involved in the incident. Further investigation is underway.*

## Mylswamy Annadurai to Head Tamil Nadu School Education Curriculum Development Committee



*CHENNAI, 30 JUN*

** The Tamil Nadu Government has constituted a School Education Curriculum Development Committee under the chairmanship of former ISRO scientist and ex-director Mylswamy Annadurai.*

** The government has issued orders forming a new 17-member committee, replacing the panel that was constituted during the previous administration.*

** The committee has been established to design a new curriculum aimed at raising the educational standards of Tamil Nadu school students to international levels and to modernize the State curriculum in line with changing times and contemporary educational needs.*